# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



# நரசிம்மநாயக்கன்பாளையம் தேர்வு நிலை பேரூராட்சி
# செயல் அலுவலர் அவர்களின் செயல் முறைகள்
## முன்னிலை: திரு.செ.த.கணேசன்



ந.க.எண்.500/2015 தேதி: 27.07.2021

கட்டிட உரிமம் எண்.60/2016–2017

பொருள்: கட்டிட உரிமம் – கோயம்புத்தூர் மாவட்டம் – நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி – இப்பேரூராட்சிக்குட்பட்ட க.ச.எண்.215/1B2 கொண்ட இடத்தில் புதிய / கூடுதல் / திருத்தி அமைத்து கட்டிடம் கட்ட – அனுமதி கோரியது – உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: திரு.எம்.ஹெச்.கலிலூர் ரகுமான், 34, ஹாரீஸ் ரோடு,புதுப்பேட்டை, விண்ணப்ப நாள்.06.07.2021

*****

Revised appl

உத்தரவு :–

கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07 மேட்டுப்பாளையம் ரோடு பகுதியில் க.ச.எண்.215/1B2 பகுதியில் பகுதியில் 19655 ச.அ.பரப்பில் குடியிருப்பு / வணிகம் / தொழிற்சாலை / கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதிகோரி சமர்ப்பித்துள்ள திருத்திய கட்டிட வரைபடங்கள், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 201 –வது பிரிவின் கீழ் இவ்வுத்தரவு தேதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் புதிய / சேர்த்து / திருத்திய மேற்குறிப்பிட்ட கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் இவ்வுத்தரவு தானாக காலாவதி ஆகிவிடும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. இவ்வனுமதி பெற்ற கட்டிடம், கட்டி முடிக்கப்பட தேதியை, கட்டிட வேலை முடிந்து பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தவும்.
2. சர்க்கார் நிலத்திலும் பொதுச்சாலைகளிலும் ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது.
3. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.
4. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுப்பித்துக் கொள்ள உரிய உரிமக்கட்டணம் செலுத்தி உரிம காலத்திற்கு 7(ஏழு) நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
5. அங்கீகாரம் பெறப்பட்ட வரைபடத்தில் மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் திருத்திய வரைபடங்கள் சமர்ப்பித்து முழு அங்கீகாரம் பெற்று கட்டிட வேலை செய்யவேண்டும்.
6. விண்ணப்பதாரர் பெறப்பட்ட கட்டிட உரிமத்தையும், வரைபடத்தையும் கட்டிடம் கட்டுமிடத்தில் வைத்திருக்க வேண்டும். பேரூராட்சி அலுவலக அதிகாரம் பெற்ற அதிகாரிகள் நேரில் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்.
7. இக்கட்டிடம் **27.07.2021 முதல் 26.07.2026** ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பிரத்தியேகமாக அனுமதிக் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்றபின் மேற்கண்ட கட்டிட வேலையினை தொடர்ந்து செய்ய வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லதக்கதல்ல.

For C.M. BUILDS PVT. LTD.

M. H. Kaleelur Rahman

Managing Director / Director

9. உரிமக்கட்டுப்பாட்டிற்கும் உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும், நகராட்சிச் சட்டத்திற்கோ அல்லது வேறெந்த சட்டத் திட்டங்களுக்கு மாறாகவோ உரிமம் பெற்றிருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்று இருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.

10. கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை பொதுப்பாதையில் விடாமல் உரிமைத்தாரர் காம்பவுண்டுக்குள் செஸ்பூல் கட்டி அப்போதைக்கப்போது சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

11. மனைப்பிரிவிற்குத் தேவையான வசதிகள் யாவும் மனைப்பிரிவு நில உரிமையாளரால் செய்து கொடுக்கவேண்டும். இந்த நிலப்பிரிவில் நில உரிமையாளரால் விதிகளின்படி தேவையான அமைத்து வசதிகளையும் செய்யாததால் தேவையான வசதிகளை செய்ய விகிதாச்சார முறையில் விண்ணப்பதாரர் செலுத்தியுள்ள இத்தொகை வசதிகளை செய்ய ஒரு பகுதித் தொகையைத் தான் எடுத்துக்கொள்ளப்படும். எடுத்துக் கொள்ளப்பட்ட தொகை போதவில்லையெனில் கூடுதலாக இப்பேரூராட்சியல நிர்ணயம் செய்யப்படும் தொகையினை விண்ணப்பத்தாரர் செலுத்த வேண்டும்.

12. மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனையிடத்தின் சொந்தகாரரும் தொகை செலுத்திய பின்னரே அனைத்து வசதிகளையும் செய்ய வேண்டியுள்ளதால் அலுவலகத்தலிருந்து இவ்வசதிகளைச் செய்யும் வரை தொகை செலுத்தியதை வைத்து உரிமை கொண்டாடக்கூடாது.

13. சமையலறையில் புகைபோக்கி அமைக்கவேண்டும்.

14. முறையான வடிகால் வசதி அமைக்கவேண்டும்.

15. கண்டிப்பாக மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

16. அனுமதி கோரும் இடம் குறித்து நீதிமன்றத்தின் வழக்கு இருப்பினும் வில்லங்கம் ஏதாவது இருப்பினும் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல.

17. மனைப்பிரிவில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்தி இருப்பினும் அப்பகுதியின் வளர்ச்சியை கணக்கில் கொண்டும், பேரூராட்சியின் நிதி வசதிக்குட்பட்டும், மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். அடிப்படை வசதிகள் குறித்து தனியாகவோ, கூட்டாகவோ பேரூராட்சிக்கு எவ்விதத்திலும் எந்த ஒரு நிர்பந்தமும் செய்தல் கூடாது.

18. சூரிய ஒளி மூலம் குளிர் நீரை வெந்நீராக்கும் கருவி பொருத்தப்பட வேண்டும்.

19. திடக்கழிவு மேலாண்மையினை கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும்.

20. கட்டிடம் கட்டுமானம் மற்றும் இதர காலங்களில் செங்கல் மற்றும் இதர புகையூட்டும் பொருட்களினால் மற்றவர்களுக்கு இடையூறு செய்தல் கூடாது.

21. கட்டிடம், சாலையிலிருந்து 10 அடியும் மற்ற பக்கங்களில் சுற்றிலும் 5 அடியும் இடைவெளி விட்டு கட்டப்பட வேண்டும்.

22. அரசு ஆணை (நிலை) எண்.79 நகராட்சியின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நீ) நாள் 16.06.2000 கீழ் உள்ள விதி முறைகளுக்குட்பட்ட அபிவிருத்தி பணிகள் செய்ய இயலும். எனவே அக்கோரிக்கையினை முன்னிருத்தக்கூடாது.

23. நிலக்கரி சாம்பலில் தயார் செய்யப்பட்ட நவீன இரக செங்கல் பயன்படுத்த வேண்டும்.

27/7/24

செயல் அலுவலர்
நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர் –641 031

பெறுபவர்:
திரு.எம்.ஹெச்.கலிலூர் ரகுமான்
34, ஹாரீஸ் ரோடு
புதுப்பேட்டை,

20/7/2024

For C.M. BUILDS PVT. LTD.
M. K. Kalilur Rahman
Managing Director / Director

நகல் :

சம்பந்தப்பட்ட வரி வசூலருக்கு கட்டிடம் முடிவடைந்ததும் வரி விதிப்பிற்காக மாதாந்திர பட்டியலில் சேர்த்து அறிக்கை சமர்ப்பிக்க.

L.B

Narasimhanaickenpalayam (Spl. Grd.) Town Panchayat 641 031 Coimbatore

# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.இரா.வாழவந்தான், பி.இ.,

## திட்ட அனுமதி

Revised appl 23

நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ்

ந.க.எண். 4015/2020/உ.திகு

தி.அ. எண். 250 அ முதல் உ வரை/2021

நாள்: 06.07.2021

உள்ளாட்சியின் பெயர்: நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி

பொருள் : திட்ட அனுமதி – கூடுதல் குடியிருப்பு கட்டிடம் - கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - வடக்கு வட்டம் – நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்.215/1B2-ல் 4750.00 ச.மீ. பரப்பளவு கொண்டமனையிடத்திற்கு ஏற்கனவே நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட க.வ /ந.ஊ.இ. 109/2015 என எண்ணிடப்பட்டு A முதல் D வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்டதில் உள்ளாட்சிக்கான சாலை பகுதியினை 87.80 ச.மீ பரப்பளவு ஒப்படைக்கப்பட்டுள்ளது மீதமுள்ள 4662.20 ச.மீ பரப்பளவில் ஸ்டில்ட் + 4 தளங்களில் FSI Area . 9248.68 ச.மீ பரப்பு கொண்ட கூடுதல குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கோரியது - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர். M.H. கலிலுர் ரஹ்மான் , கோயம்புத்தூர் அவர்களின் விண்ணப்பம் நாள். 02.11.2020
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் செயலாணைக் கடிதம் ந.க.எண். 20223/2020/TCP-3 நாள்.24.03.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் செயலாணைக் கடிதம் ந.க.எண். 20801/2013/BA-1 நாள்.25.06.2015
4. உறுப்பினர் செயலர் , இணை இயக்குநர் , கோயம்புத்தூர் அவர்களின் உத்திரவு கடிதம் ந.க.எண். 7325/2012/உதிகு-3 நாள்.07.04.2016 (திட்ட அனுமதி எண். 65 அ,ஆ,இ,ஈ /2016)
5. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.4.2.2019.
6. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.8557/2019/GR நாள் 08.05.2019
8. மனுதாரர் கட்டணம் செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்ட நாள். 23.06.2021 & 01.07.2021

*****

உத்தரவு:

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம், - கோயம்புத்தூர் மாவட்டம் - வடக்கு வட்டம் – நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்.215/1B2-ல் 4750.00 ச.மீ. பரப்பளவு கொண்டமனையிடத்திற்கு ஏற்கனவே நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஒப்புதல்



For C.M. BUILDS PVT. LTD.
M. H. Kalilur Rahman
Managing Director / Director

அளிக்கப்பட்ட க.வ /ந.ஊ.இ. 109/2015 என எண்ணிடப்பட்டு A முதல் D வரை என எல்லையிட்டு மனையிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்டதில் உள்ளாட்சிக்கான சாலை பகுதியினை 87.80 ச.மீ பரப்பளவு ஒப்படைக்கப்பட்டுள்ளது மீதமுள்ள 4662.20 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்திற்கு " A முதல் H " என எல்லையிட்டும், வரைபடத்திற்கு **க.வ./.ந.ஊ.இ.எண். 189/2021** என எண்ணிட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் மனையிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்து. அம்மனையில் அமையும் உத்தேச கூடுதல் கட்டிட தளங்களின் பரப்பு விபரம் கீழ்கண்டவாறு அமைகிறது.

**மனையின் பரப்பு : 4662.20 ச.மீ**

| தளங்கள் | FSI ச.மீ | Non FSI ச.மீ | Deductions ச.மீ | Total ச.மீ | உபயோகம் |
|---|---|---|---|---|---|
| Stilt Floor | --- | 2537.39 | ---- | ---- | Parking |
| First Floor | 2312.17 | ---- | 225.22 | 2537.39 | Residential |
| Second Floor | 2312.17 | ---- | 225.22 | 2537.39 | Residential |
| Third Floor | 2312.17 | ---- | 225.22 | 2537.39 | Residential |
| Fourth Floor | 2312.17 | ---- | 225.22 | 2537.39 | Residential |
| **Total** | **9248.68** | **2537.39** | **900.88** | **10149.56** | |

மேற்கண்ட கூடுதல் குடியிருப்பு கட்டுமானத்திற்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அபிவிருத்தி கட்டணம் | ரூ. 24,350/- | நாள். | 23.06.2021 & 01.07.2021 |
| 2. | நன்னிலை கட்டணம் | ரூ. 400/- | நாள். | 23.06.2021 |
| 3. | I & A கட்டணம் | ரூ. 3,66,500/- | நாள். | 23.06.2021 & 01.07.2021 |
| 4. | Security கட்டணம் | ரூ. 1,77,500/- | நாள். | 23.06.2021 |
| 5. | Scrutiny Fees | ரூ. 32,500/- | நாள். | 23.06.2021 |
| 6. | CCC கட்டணம் | ரூ. 26,000/- | நாள். | 23.06.2021 |
| 7. | Display Charges | ரூ. 1,500/- | நாள். | 23.06.2021 |

மேற்கண்ட கட்டணங்கள் பெறப்பட்டுள்ளதால் உத்தேச கூடுதல் குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்டஅனுமதி எண். 250 அ முதல் உ வரை /2021 என்ற எண்ணில் **06.07.2021** முதல் **05.07.2026** வரை 5 (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு /பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

For C.M. BUILDS PVT. LTD.
M. H. Kalaidasan Rahman
Managing Director / Director

## சிறப்பு நிபந்தனைகள்

1. பார்வை 3 -ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களால் கிட்ட அனுமதி வழங்க இசைவு வழங்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள OSR - ற்கான 475.96 ச.மீ பரப்பளவு மனையிடம் செயல் அலுவலர் , நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு 28.09.2015-ல் தானமாக தானபத்திரம் எண்.12460/2015 மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

2. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி,திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி , திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building rules under the local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects /licensed surveyors and the structural engineer associated with the development shall ensure the developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

4. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.

5. The Provision in the G.O.(Ms) No. 17, Housing and Urban Development (UD 4(3)) Development, dated 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

6. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

7. The Tamil Nadu Government in G.O.Ms No. 112, Housing and Urban Development Department Dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8. அரசாணைஎண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 04.02.2019 ன்படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட உத்தேசங்கள், கட்டுமானப்பணி Plinth Level –ல் இடம் நேராய்வு செய்ய மனுதாரர் விண்ணப்பித்து, கட்டுமானப்பணி தொடர

For C.M. BUILDS PVT. LTD.

M. H. Kalandam Daham.

Managing Director / Director

26

Construction Continuance Certificate இவ்வலுவலகத்தில் பெறப்படல் வேண்டும். மேலும் கட்டுமானப்பணி முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட பின்னர் (பணிமுடிவு சான்று) Completion Certificate கோரி மனுதாரர் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பித்து சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

9. ந.க.எண்.8557/2019/GR நாள் 08.05.2019-ன்படி "This Order is passed subject to the Writ Petition W.P.(MD) No.8948 of 2019" என நிபந்தனையிட்டு உத்தரவு வழங்கப்படுகிறது.

## பொது நிபந்தனைகள்

1. திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35-1972)- கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2. பிரிவு 80, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)-ன்கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3. கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ., (ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். (ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5. சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6. மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன் படுத்தப்படவேண்டும்.

7. (i) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும். (ii) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும் (iii) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

8. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

FOR C.M. BUILDS PVT. LTD.

M.H. Kalamkam Rahman

Managing Director / Director

9. கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத்தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

11. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

12. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

13. The Applicant / developer and also the architects / Licensed Surveyors and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

14. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

15. கட்டடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

16. District Environmental Engineer, TNPCB, Coimbatore, South Proceeding No.1995CBS/OS/DEE/ TNPCB/CBS/A12018/, Dated.1.12.2018, and Consent Order No.1801217952103, Dated.1.12.2018-ல் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவும் பின்பற்றப்படவேண்டும்.

17. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு/ வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே ( **நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி உட்பட**) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

18. **நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி** எல்லைக்குள் உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு / மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

19. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

For C.M. BUILDS PVT LTD.

M. H. Kalaleem Rahman

Managing Director / Director

28

திட்ட அனுமதி செயலாணை கடிதத்தினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர்

**இணைப்பு**
முத்திரையிட்ட வரைபடம் - **2**
செயலாணை கடிதம் - **2**

**பெறுநர்**
செயல் அலுவலர்,
நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர்.

**நகல்**

1.Mr.M.H.Khaleelur Rahuman,
S.NO.215/1B2,
Narasimmanaickenpalayam,
Coimbatore - 641 017
ph.70103-63690
email.eurocco@gmail.com

2.Chair Person,
Tamilnadu Real Estate Regulatory Authority,
CMDA Tower - II 1st Floor , No.1A,
Gandhi Irwin Bridge Road,
Egmore ,
Chennai - 600 008

For C.M. BUILDS PVT. LTD.
Managing Director / Director



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate